# பொதுச் சேமிப்புக் கணக்குகள்

**முக்கிய விதிகளின் சுருக்கம்***

## துரித தகவல்கள்

| பொதுவான சேமிப்புக் கணக்குகள் - திட்டத்தின் சிறப்பம்சங்கள் | | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| **தகுதி நிபந்தனைகள்** | • இ.ரூ. 35,000 அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை சராசரி வரவு/பற்று மீதியாகப் பேணப்பட வேண்டும். | • விதிகள் மற்றும் நிபந்தனைகள் |
| **ஒரே பார்வையில் நன்மைகள்** | • நாடெங்கும் ஏதேனுமொரு பிளஸ் ATM ஊடாக பணத்தை மீளப் பெறக்கூடிய வீசா டெபிற் கார்ட்.<br>• 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை தொலைபேசி.<br>• சகல கிளைகளிலும் பண வைப்பு/மீளப்பெறுகை வசதிகள்.<br>• இணையத்தள வங்கிச் சேவையும் தொலைபேசி வங்கிச் சேவையும் இலவசம். | |
| **நிதி அம்சங்கள்** | | |
| **குறை மீதிக் கட்டணம்** | • சராசரி மீதி பேணப்படாவிட்டால், **மாதாந்த குறை மீதிக் கட்டணமாக இ.ரூ. 1500** அறவிடப்படும். | • வங்கியின் விதிப்பனவு வழிகாட்டி |

## துரித தகவல்கள்

| உள்வரும் முதலீட்டுக் கணக்குகள் - திட்டத்தின் சிறப்பம்சங்கள் | | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| **தகுதி நிபந்தனைகள்** | IIA கணக்குகளை பின்வருவோர் ஆரம்பிக்க முடியும்:<br>1. இலங்கையில் அல்லது அதற்கு வெளியே வசிக்கும் தேசிய பிரஜை அல்லாதவர்<br>2. இலங்கைக்கு வெளியே வசிக்கும் இலங்கையை மூலவிடமாகக் கொண்ட தேசிய பிரஜை அல்லாதவர்<br>3. இலங்கைக்கு வெளியே வசிக்கும் இலங்கைப் பிரஜை ஒருவர்<br>4. அந்த அதிகாரம் பெற்ற வணிகருடன் IIA கணக்கொன்றைப் பேணிய மரணமடைந்த நபருடைய சொத்துகளின் நிர்வாகி அல்லது நிறைவேற்றுநர், மரணமடைந்த நபருடைய சொத்துகளின் நிர்வாகம் பூர்த்தியாகும் வரை<br>5. காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரம் அளிக்கப்படக்கூடிய வேறொரு நபர் அல்லது பிரிவு நபர்கள் | • விதிகள் மற்றும் நிபந்தனைகள் |
| **ஒரே பார்வையில் நன்மைகள்** | • இது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டம் என்பதால், மேலதிக விபரங்களுக்கு திட்டத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளைப் பார்க்கவும். | |
| **நிதி அம்சங்கள்** | | |
| **குறை மீதிக் கட்டணம்** | • குறை மீதிக் கட்டணங்கள் இதற்குப் பொருந்தாது. | •வங்கியின் விதிப்பனவு வழிகாட்டி |

| **பொதுச் சேமிப்புக் கணக்குகள்** | | **முக்கிய விதிகளின் சுருக்கம்*** |
|---|---|---|
| **துரித தகவல்கள்** | | |
| **சிறுவர் சேமிப்புக் கணக்குகள் - திட்டத்தின் சிறப்பம்சங்கள்** | | **மேலதிக தகவல்களுக்கு** |
| **தகுதி நிபந்தனைகள்** | • இக் கணக்குகளை, பராயமடையாதவர்களுக்காக (18 வயதிற்குட்பட்டவர்கள்) பெற்றோர்/பாதுகாவலர்கள் ஆரம்பிக்க முடியும்.<br>• குறைந்தபட்ச ஆரம்ப முதலீடு இ.ரூ. 3000 /USD 300 அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமாக தொகையாகும்.<br>• புராயமடையாதவர் 18 வயதை அடையும் வரை மீளப்பெறுகைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். | • விதிகள் மற்றும் நிபந்தனைகள் |
| **ஒரே பார்வையில் நன்மைகள்** | • 12 வயதை அடைந்த பின், "பார்வையிடுவதற்கு மட்டும்" என்ற வசதியைக் கொண்ட ATM அட்டை வழங்கப்படும்.<br>• விரும்பத்தக்க வட்டி வீதங்கள்.<br>• பிறந்தநாள் அன்பளிப்புக்கள்.<br>• 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை தொலைபேசி.<br>• சகல கிளைகளிலும் பண வைப்பு வசதி<br>• இலவச இணையத்தள வங்கிச் சேவை மற்றும் தொலைபேசி வங்கிச் சேவை (பார்வையிடும் வசதி மட்டும்). | |
| **நிதி அம்சங்கள்** | | |
| குறை மீதிக் கட்டணம் | • குறை மீதிக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. | •வங்கியின் விதிப்பனவு வழிகாட்டி |

| | | |
|---|---|---|
| **முக்கிய விதிகள்** | | **மேலதிக தகவல்களுக்கு** |
| **HSBC MASS க்கான தகுதி** | • சிறப்பம்சங்களையும் நன்மைகளையும் அனுபவிக்க வேண்டுமாயின், நீங்கள் தகுதி நிபந்தனைகளையும் பொருத்தமான ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் பூர்த்திசெய்ய வேண்டும். | • ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கு விதிகள் மற்றும் நிபந்தனைகள் ("T&Cs") |
| **தகுதி நிபந்தனைகளின் மாற்றம்** | • வங்கியானது தகுதி நிபந்தனைகளைக் காலத்திற்குக் காலம் மாற்ற உரிமை கொண்டுள்ளது. அத்தகைய திருத்தங்கள் யின் பொது இணையத்தளத்திலும் கிளைகளிலுள்ள பொது இடங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும். | |

| | | |
|---|---|---|
| **கூட்டுக் கணக்குகள்** | • நீங்கள் உங்களது கூட்டுக் கணக்கு வைப்பாளருடன் சேர்ந்து, சம்பந்தப்பட்ட கணக்கு, சேவை அல்லது விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான சகல கடப்பாடுகளுக்கும் பொறுப்புக்களுக்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பேற்க வேண்டும். | |
| **அறவீடுகள்** | • பொருத்தமானவிடங்களில் காலத்திற்குக் காலம் சேவைக் கட்டணங்கள், வசதிக் கட்டணங்கள் அல்லது ஏனைய அறவீடுகள் விதிக்கப்படும். HSBC இணையத்தளத்தில் அல்லது கிளைகளில் கிடைக்கும் "வாடிக்கையாளர்களுக்கான வங்கி விதிப்பனவு வழிகாட்டி"யில் இக் கட்டணங்களும் அறவீடுகளும் பிரசுரிக்கப்பட்டிருக்கும். | |
| **கால வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டி வீதங்கள்** | • சேமிப்பு மற்றும் கால வைப்புக் கணக்குகளுக்கான (வெளிநாட்டு நாணயம்/உள்நாட்டு நாணயம்) வட்டி வீதங்கள் காலத்திற்குக் காலம் முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம். எனினும், ஏற்கனவே செய்யப்பட்ட கால வைப்புக்களுக்கு, அவை முதிர்ச்சி அடையும் வரை, ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி வீதம் மாற்றப்பட மாட்டாது. | • வட்டி வீதங்கள் |
| **கடன்கள் மற்றும் சகல சொத்துத் திட்டங்களுக்கான வட்டி வீதங்கள்** | • வைப்பு/கடன் திட்டங்களுக்கான வட்டி வீதங்கள் காலத்திற்குக் காலம் சந்தை வட்டி வீதங்களுக்கேற்ப வங்கியினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் மாற்றப்படலாம். வுட்டி வீதங்களில் செய்யப்படும் மாற்றங்கள் எமது கட்டடங்களில் மற்றும் /அல்லது HSBCயின் பொது இணையத்தளத்தில் பார்வைக்கு வைக்கப்படும் அறிவித்தல்கள், மற்றும்/அல்லது கடிதம் மற்றும்/அல்லது விபரக்கூற்றுச் செய்தி மற்றும் /அல்லது பொருத்தமான வேறேதும் வழியில் உங்களுக்கு அறிவிக்கப்படும். | |

## பொதுச் சேமிப்புக் கணக்குகள்

**முக்கிய விதிகளின் சுருக்கம்***

| துரித தகவல்கள் | | |
|---|---|---|
| முக்கிய விதிகள் | | **மேலதிக தகவல்களுக்கு** |
| **சேவைகளின் அல்லது கணக்குகளின் முடிவுறுத்தல்** | • நீங்கள் எழுத்துமூல முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு எமது சேவைகளை அல்லது உங்களின் கணக்குகளை முடிவுறுத்தல் செய்யலாம்.<br>• நாம் முன்னறிவித்தல் கொடுக்காமலே எமது சேவைகள் முழுவதையும் அல்லது அவற்றில் ஏதேனுமொரு பகுதியை முடிவுறுத்தல் செய்யவும் முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு உங்கள் கணக்குகளை முடிவுறுத்தல் செய்யவும் முடியும். | • ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கு விதிகள் மற்றும் நிபந்தனைகள் ("T&Cs") |

| | | |
|---|---|---|
| **விதிகள் மற்றும் நிபந்தனைகளின் மாறுபாடுகள்** | • காலத்திற்குக் காலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றும் உரிமை எமக்கு உண்டு. இந்த மாற்றங்கள் எமது கட்டடங்களில் பார்வைக்கு வைக்கப்படும் அறிவித்தல்கள், HSBCயின் பொது இணையத்தளம் அல்லது நாம் பொருத்தமெனக் கருதும் வேறேதும் வழியில் உங்களுக்கு அறிவிக்கப்படும். | |
| **மோசடி தவிர்ப்பு மற்றும் சர்ச்சை தீர்ப்பு** | • உங்கள் விபரக்கூற்றுக் கிடைத்ததும் அதனைப் பரிசீலனை செய்து அதில் வழமைக்கு மாறான கொடுக்கல் வாங்கல் எதுவும் காணப்படின் 20 நாட்களுக்குள் வங்கிக்கு அறிவிக்கவும். | • சர்ச்சை தீர்ப்பு |
| **இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்** | • நிதி நிறுவனங்களின் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படுவதன் அல்லது இடைநிறுத்தப்படுவதன் காரணமாக வைப்பாளர்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளில் இருந்து அவர்களை முழுமையாக அல்லது பகுதியளிவில் பாதுகாப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) அமுல் செய்யப்படும் ஒரு செயன்முறையே இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் (SLDIS) ஆகும். த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டெட்டின் இலங்கைக் கிளை SLDIS அமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றது. ஆகவே, கோரல் வைப்பு/கள், கால வைப்பு/கள், அல்லது சேமிப்பு வைப்பு/களை வைத்திருக்கும் தகுதியுள்ள கணக்கு வைப்பாளர் ஒவ்வொருவருக்கும், இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் விதத்திலும் SLDIS திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாகவும் கணிக்கப்படும் இ.ரூ.1,100,000/-க்கு மேற்படாத ஒரு தொகை இழப்பீடாக வழங்கப்படும். கூட்டுக் கணக்கு வைப்பாளர்களைப் பொறுத்தவரையில், தகுதியுள்ள ஒவ்வொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் ஒரு புறம்பான வைப்பாளராகக் கருதப்பட்டு, ஒவ்வொருவருக்கும் CBSLஇனால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் விதத்தில் இ.ரூ.1,100,000/-க்கு மேற்படாத இழப்பீடு வழங்கப்படும். காலத்திற்குக் காலம் இற்றைப்படுத்தப்படும் SLDIS பற்றிய மேலதிக விபரங்களை அறிய, www.cbsl.gov.lk/sri-lanka-deposit-insurance-scheme ஐ பார்க்கவும். | • விதிகள் மற்றும் நிபந்தனைகள் |

## உங்கள் குரல்

நீங்கள் உங்களுடைய கருத்துக்களை எமக்குத் தெரிவிக்க விரும்பினால், தயவுசெய்து எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

தபால் முகவரி – வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் உறவுகள் முகாமையாளர், HSBC இல. 24, சேர் பரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 1.

பிரிமியர் விசாரணைகளுக்கு
மின்னஞ்சல் : premiercustomersolutions@hsbc.com.lk
ஹொட்லைன்: +94 114472272

தனிப்பட்ட வங்கிச் சேவை விசாரணைகளுக்கு
மின்னஞ்சல் : customersolutions@hsbc.com.lk
ஹொட்லைன்: +94 114472200

கிறெடிட் கார்ட் விசாரணைகளுக்கு
மின்னஞ்சல் : creditcards@hsbc.com.lk
ஹொட்லைன்: +94 114472200

மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து www.hsbc.lk என்ற எமது வலைத்தளத்தில் பிரவேசியுங்கள்.

நீங்கள் முன்வைக்கும் ஏதேனும் முறைப்பாடுளை உங்களுக்குப் பூரண திருப்பி அளிக்கும் முறையில் தீர்த்துவைக்கவே நாம் எப்போதும் விரும்புகின்றோம். அதே சமயத்தில், நீங்கள் நிதி ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடாபுகொண்டு பரிகாரத்தைக் கோரவும் முடியும். ஆலாட்சி அதிகாரியின் தொடர்பு விபரங்கள்.

தபால் முகவரி – நிதி ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம், இலங்கை, இல. 143, வஜிரா வீதி, கொழும்பு 06.

தொலைபேசி: +94 112 595 625

∴பெக்ஸ்: +94 112 595 624

மின்னஞ்சல்: infor@financialombudsman.lk

வலைத்தளம்: www.financialombudsman.lk

- ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கிற்கு ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளுக்கான பூரண விதிகள் மற்றும் நிபந்தனைகளே செல்லுபடியாகும். இந்த அட்டவணையில் காணப்படுவது தகவலுக்காகத் தரப்பட்டுள்ள முக்கிய விதிகளின் சுருக்கம் மாத்திரமே. இதனை பூரண விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குப் பதிலானதாகக் கொள்ள முடியாது. ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் பூரண விதிகள் மற்றும் நிபந்தனைகளே சரியானதாக மேலாதிக்கம் செலுத்தும். மேலதிக தகவல்களுக்கு, பார்க்கவும்: https://www.hsbc.lk/terms-and-conditions/
- இந்த முக்கிய விதிகளின் சுருக்கத்தின் ஆங்கில மற்றும் சிங்களப் பிரதிகள் www.hsbc.lk என்ற இணையத்தளத்தில் கிடைக்கும். அவற்றின் அச்சுப்பிரதிகளை வங்கியின் சகல அலுவலகங்கள் மற்றும்/அல்லது கிளை அலுவலகங்களில் பெறலாம். சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புக்களில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமாயின், ஆங்கில மூலப்பிரதியே சரியானதாக மேலாதிக்கம் செலுத்தும் என்பதை நான்/நாம் இத்தால் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம்.

**மேலதிக தகவல்களுக்கு, பின்வரும் வலைத்தளங்களைப் பார்க்கவும்:**

வங்கியின் விதிப்பனவுகள் வழிகாட்டி: https://www.hsbc.lk/tariffs/

வட்டி வீதங்கள;: www.hsbc.lk/rates

சர்ச்சை தீர்வு: https://www.hsbc.lk/credit-cards/useful-links/#dispute

**GENAA07 – 01/2024 (T)**